இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 29 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 22 – சனிக்கிழமை 07 செப்டம்பர் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 29 : Thiruvalluvar Year - 2055 - Aavani 22 - Saturday 07 September 2024 - Trichy ★★ 12 Pages ₹5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 4.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ட்ரில்லியன்ட் (Trilliant) நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ட்ரில்லியன்ட் நிறுவனத்தின் தலைமை வணிக அலுவலர் மைக்கேல் ஜே மார்டிமர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், நைக்கி நிறுவனத்தின் தலைமை வழங்கல் அலுவலர் (Chief Supply Chain Officer) வெங்கடேஷ் அழகிரிசாமி மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் நைக்கி நிறுவனத்தின் தோல் அல்லாத காலணிகளின் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், ஆடைகள் உற்பத்திக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது, சென்னையில் தயாரிப்பு உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையத்தை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆகியவை குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில் உலகளாவிய உதவி மையம் – உற்பத்தி மையம் நிறுவிட – சிகாகோவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# ‘டிரில்லியன்ட்’ நிறுவனம் - ரூ.2,000 கோடியில் ஒப்பந்தம்!

## ‘நைக்கி’ – ‘ஆப்டம்’ நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகள் மேற்கொள்ள முதல்வர் அழைப்பு !

**சிகாகோ, செப். 7 -**

**டிரில்லியன்ட் நிறுவனத்துடன் ரூ.2000 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் அந்நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டதுடன் நைக்கி மற்றும் ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.**

அதன் விபரம் வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 4.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், உலகின் முன்னணி காலணி மற்றும் விளையாட்டு ஆடைகள் தயாரிப்பு நிறுவனமான நைக்கி மற்றும் உலகின் முன்னணி ஹெல்த்கேர் நிறுவனமான ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

மாநிலம் முழுவதும் பரவலான மற்றும் நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் திட்டங்கள் தொடங்கப்படுவதால், அம்மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளின் அருகாமையிலேயே வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்படுகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ஆப்டம் இன்சைட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் ரோஜர் கானர், யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் முதுநிலை துணைத் தலைவர் ஜான் மியாட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாட்டில் திறன் வளர்ச்சி மிகுந்த இளைஞர்கள், பெண் கல்வி மற்றும் மேம்பாடு, உயர்கல்வியில் சாதனை, தரமான உட்கட்டமைப்பு வசதிகள் என இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு மிகவும் உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக அளவில் நிறுவனங்களை தொடங்கிடவும், தொழில் முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க நாட்டில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணத்தின் போது, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சான் பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், ஓமியம் நிறுவனத்துடன் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன.

சிகாகோ நகரில் 3.9.2024 அன்று ஈட்டன் நிறுவனத்துடன் 200 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டு பொறியியல் மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், அஷ்யூரன்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை (GCC) சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் மொத்தம் 10 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**அதன் தொடர்ச்சியாக 4.9.2024 அன்று சிகாகோவில், ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும், நைக்கி மற்றும் ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அழைப்பு விடுத்தார். அதன் விவரங்கள்:**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## டிரில்லியன்ட்டின் மதிப்புமிக்க கூட்டாண்மைக்கு நன்றி !

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சிகாகோ, செப். 7-**

**சிகாகோவில் ‘டிரில்லியன்ட்’ நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ‘நைக்கி’ மற்றும் ‘ஆப்டம்’ நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப்பதிவில், “டிரில்லியன்டின் மதிப்புமிக்க கூட்டாண்மைக்கு நன்றி!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

“சிகாகோவில் அற்புதமான முன்னேற்றங்கள்!

டிரில்லியன்ட் (Trilliant) நிறுவனம் தமிழ்நாட்டில் அதன் உற்பத்தி அலகு, வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையத்தை நிறுவிட 2000 கோடி ரூபாயில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டேன். இந்த மதிப்புமிக்க கூட்டாண்மைக்கு ட்ரில்லியன்ட்டுக்கு நன்றி!

நைக்கி (Nike) உடன் அதன் காலணி உற்பத்தியை விரிவுபடுத்துவது மற்றும் சென்னையில் ஒரு தயாரிப்பு, உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையம் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தையை மேற்கொண்டேன்.

ஏற்கனவே தமிழ்நாட்டில் ஆப்டம் (Optum) நிறுவனத்தில் 5,000 பேர் வேலை செய்து வரும் நிலையில், அந்நிறுவனம் சுகாதாரத் துறைக்கான திறமையாளர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. திருச்சி மற்றும் மதுரையில் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்துவது குறித்தும் பரிசீலிக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

முன்னெடுப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது.”

இவ்வாறு அவ்வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் தமது இரு கண்கள் என வாழ்ந்தவர் !

### கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.க்கு – அவரது பிறந்தநாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் !

**சிகாகோ, செப். 7-**

**கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு, நேற்று முன்தினம் 153ஆவது பிறந்த நாளாகும்!**

**இந்நாளில் முதல்வர் அவர்கள், சிகாகோவிலிருந்து வெளியிட்ட வலைதளப் பதிவில்,**

**“நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் தமது இரு கண்கள் என வாழ்ந்திட்ட பெருமகனார் கப்பலோட்டிய தமிழர்!” எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.**



முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராகக் கப்பலோட்டி, சிறையில் வாடிய ‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ. சிதம்பரனார் அவர்களது புகழ் வாழ்க!

நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் தனது இரு கண்கள் என வாழ்ந்திட்ட அந்தப் பெருமகனாரின் தியாக வாழ்வை, இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து அவரது பெருமையைப் போற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.